DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 161/2018 |
| Deposition of witness | : | P W– 6 |
| Name | : | பாஸ்கரன் |
| Father's /Husband Name | : | சேதுராமன் |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 65 |
| Occupation | : | காவல் உதவி ஆய்வாளர் ஓய்வு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 11th day June, 2025.
AccusedA1, A5 present. A2, A3 and A4 absent. Petition under section 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 04.12.2017 ம் தேதி பேரளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது தேர்ப்பாக்குடி காளியம்மன் கோவில் தெருவைச்சேர்ந்த அருள் மனைவி லல்லிபாய் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று 05.12.2017 ம் தேதி காலை 09.00 மணிக்கு பேரளம் காவல் நிலைய குற்ற எண். 428/2017 சட்டப்பிரிவுகள் 294(b), 323, 355, 506(i) இதச மற்றும் 4 of TNPHW Act ன் படி முதல் தகவலறிக்கை பதிவு செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அந்த புகார் மனு **அ.சா.ஆ– 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் பதிவு செய்த முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ– 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு நான் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 05.12.2017 ம் தேதி காலை 10.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஜெபராஜா, விஜயக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தேன். அவை முறையே **அ.சா.ஆ. 5** மற்றும் **அ.சா.ஆ. 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சாட்சி லல்லிபாயை எதிரிகள் வழிமறித்து பிரச்சனை செய்ததாக தெரிய வந்ததால் இவ்வழக்கின் சட்டப்பரிவினை 294(b), 323, 355, 506(i) இதச மற்றும் 4 of TNPHW Act லிருந்து 294(b), 323, 341, 355, 506(i) இதச

மற்றும் 4 of TNPHW Act ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ. 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியை தேடிவந்த நிலையில் எதிரிகள் ராஜ்குமார், பாஸ்கர், பிரகாஷ் ஆகிய மூவரும் முன்ஜாமின் பெற்றதால் இவ்வழக்கில் அவர்களை கைது செய்யவில்லை. மற்ற எதிரிகள் அருள் மற்றும் ராஜலெட்சுமி ஆகியோர் தலைமறைவாக இருந்ததால் இவ்வழக்கில் கைது செய்யவிலல்லை. இத்துடன் எனது விசாரணையை முடித்து ஆய்வாளர் சந்திரா பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

பார்வை மகசர், மாதிரி வரைபடம் ஆகியவற்றை காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கின் புகார் கற்பனையானது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.06.11 16:26:58 +0530